KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2, No. n08 (2018)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v2in08.1

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் வாழ்வும் பணியும்

Pavalareru S. Balasundaranar's : Life and Contributions

Dr. U. Alibava[1,*]

[1] Professor & Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 20 October 2018
Revised: 21 October 2018
Accepted: 25 October 2018

Article ID
KIJTS-2018-0050

Peer review
Double-blind peer review

Keywords
Pavalareru S. Balasundaranar
Tamil scholarship
Tamil lexicography
Tamil literature
literary research
poetry
drama
translation
Tamil language teaching
academic contributions.

ABSTRACT

This article examines the life and multifaceted contributions of Pavalareru S.Balasundaranar(18 January 1924–1 August 2007), a Tamil scholar, poet, teacher, lexicographer and researcher. It outlines his early life and education, followed by his long academic career, during which he served as a teacher and continued to contribute to Tamil studies. The article highlights his work in lexicography, including the study and explanation of Tamil words, their structure, meanings and usage. It also discusses his literary production across poetry, drama, essays, translations and research-oriented writing. His publications and scholarly interests reflect a sustained commitment to documenting Tamil literature, clarifying linguistic and literary concepts, and making knowledge accessible to students and researchers. Particular attention is given to his role as an educator: over approximately 32 years of teaching, he guided students in Tamil language and literature and helped nurture scholarly interest in the field. By bringing together his literary, lexicographical and academic activities, the article presents Balasundaranar as a contributor to the preservation, study and development of Tamil language and literary traditions. His life and work illustrate the close relationship between teaching, research and creative literary practice.

How to cite this article: Dr. U. Alibava (2018). பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் வாழ்வும் பணியும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *2*(n08), 1. https://doi.org/10.63300/kalanjiyam.v2in08.1
Copyright and licence: © 2018 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் வாழ்வும் பணியும்

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர்

தமிழியல்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024

Email : alibavapkm@gmail.com

Dr. U. Alibava

Professor & Head

Department of Tamil Studies

Bharathidasan University

Tiruchirappalli - 620 024

Email : alibavapkm@gmail.com

Pavalareru S. Balasundaranar's : Life and Contributions

Abstract

This article examines the life and multifaceted contributions of Pavalareru S.Balasundaranar(18 January 1924–1 August 2007), a Tamil scholar, poet, teacher, lexicographer and researcher. It outlines his early life and education, followed by his long academic career, during which he served as a teacher and continued to contribute to Tamil studies. The article highlights his work in lexicography, including the study and explanation of Tamil words, their structure, meanings and usage. It also discusses his literary production across poetry, drama, essays, translations and research-oriented writing. His publications and scholarly interests reflect a sustained commitment to documenting Tamil literature, clarifying linguistic and literary concepts, and making knowledge accessible to students and researchers. Particular attention is given to his role as an educator: over approximately 32 years of teaching, he guided students in Tamil language and literature and helped nurture scholarly interest in the field. By bringing together his literary, lexicographical and academic activities, the article presents Balasundaranar as a contributor to the preservation, study and development of Tamil language and literary traditions. His life and work illustrate the close relationship between teaching, research and creative literary practice.

Keywords

Pavalareru S. Balasundaranar ; Tamil scholarship; Tamil lexicography; Tamil literature; literary research; poetry; drama; translation; Tamil language teaching; academic contributions.

சுருக்கம்

தமிழ்ப் பெரும்புலவர், கவிஞர், ஆசிரியர், அகராதியாளர், ஆய்வாளர் எனப் பல்துறைப் பரிமாணம் கொண்ட பாவலரேறு சி. பாலசுந்தரனார் (18 ஜனவரி 1924 – 1 ஆகஸ்ட் 2007) அவர்களின் வாழ்க்கையையும் பல்முக பங்களிப்புகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது. அவரது இளமைக்காலம், கல்வி, அதனைத் தொடர்ந்த நீண்ட கல்விப்பணி — ஆசிரியராகப் பணியாற்றியதும் தமிழாய்வுக்குத் தொடர்ந்து பங்களித்ததும் — ஆகியவற்றை இது எடுத்துரைக்கிறது.

தமிழ்ச் சொற்களையும் அவற்றின் அமைப்பு, பொருள், வழக்கு ஆகியவற்றையும் ஆய்ந்து விளக்கிய அவரது அகராதித் துறைப் பணிகளை இக்கட்டுரை சிறப்பித்துக் காட்டுகிறது. மேலும், கவிதை, நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, ஆய்வு நோக்கிய எழுத்து எனப் பல்வேறு வடிவங்களில் அவர் நிகழ்த்திய இலக்கியப்

படைப்பாக்கத்தையும் விவாதிக்கிறது. அவரது நூல்களும் ஆய்வு ஆர்வங்களும், தமிழ் இலக்கியத்தைப் பதிவு செய்தல், மொழி சார்ந்த மற்றும் இலக்கியம் சார்ந்த கருத்துகளைத் தெளிவுபடுத்துதல், அறிவை மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் எளிதில் எட்டும் நிலையில் வைத்தல் ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த நிலைத்த உறுதியை வெளிப்படுத்துகின்றன.

ஓர் ஆசிரியராக அவர் ஆற்றிய பங்குக்குச் சிறப்புக் கவனம் அளிக்கப்படுகிறது: ஏறத்தாழ 32 ஆண்டுகள் கற்பித்தல் பணியில், தமிழ்மொழி மற்றும் இலக்கியத்தில் மாணவர்களை வழிநடத்தி, இத்துறையில் ஆய்வு ஆர்வத்தை வளர்த்தெடுக்க உதவினார். அவரது இலக்கிய, அகராதி மற்றும் கல்விசார் செயல்பாடுகளை ஒருங்கே இணைத்து, தமிழ்மொழி மற்றும் இலக்கிய மரபுகளின் பாதுகாப்பு, ஆய்வு, வளர்ச்சி ஆகியவற்றுக்குப் பங்களித்தவராக பாலசுந்தரனாரை இக்கட்டுரை முன்வைக்கிறது. அவரது வாழ்வும் பணியும், கற்பித்தல், ஆய்வு, படைப்பிலக்கிய ஈடுபாடு ஆகியவற்றுக்கு இடையேயான நெருங்கிய உறவை எடுத்துக்காட்டுகின்றன.

திறவுச்சொற்கள்

பாவலரேறு சி. பாலசுந்தரனார்; தமிழ்ப் புலமை; தமிழ் அகராதியியல்; தமிழ் இலக்கியம்; இலக்கிய ஆய்வு; கவிதை; நாடகம்; மொழிபெயர்ப்பு; தமிழ்மொழிக் கற்பித்தல்; கல்விசார் பங்களிப்புகள்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கியத்தின் மேன்மைக்கும் தம் வாழ்நாளை அர்ப்பணித்த தமிழறிஞர்கள் வரிசையில் பாவலரேறு ச. பாலசுந்தரனார் குறிப்பிடத்தக்கவர். புலவராகவும், மரபிலக்கண அறிஞராகவும், ஆசிரியராகவும், உரையாசிரியராகவும், ஆய்வாளராகவும் பன்முகத் திறனுடன் விளங்கிய பாலசுந்தரனார் தமிழ் இலக்கண ஆய்வுலகிற்குத் தனித்துவமான பங்களிப்புகளைச் செய்துள்ளார். 1924ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் நாள் தஞ்சாவூர் கருந்திட்டைக்குடியில் மு. சந்திரசேகரனுக்கும் விசயாம்பாளுக்கும் பிறந்து 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1ஆம் நாள் மறைந்த இவர் தஞ்சைத் தமிழ்ச் சூழலோடு நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். கரந்தைப் புலவர் கல்லூரியில் கல்வி பயின்று, பின்னர் ஆசிரியராகப் பணியாற்றினார். ஏறத்தாழ 32 ஆண்டுகள் ஆசிரியப் பணியில் ஈடுபட்டதுடன், பல மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணத்தையும் இலக்கியத்தையும் கற்பித்தார்.

அவருடைய வாழ்க்கை என்பது தனிப்பட்ட கல்வி வளர்ச்சியோடு முடிந்துவிடவில்லை. தமிழின் மரபையும் அதன் அறிவுச் செல்வத்தையும் ஆராய்ந்து, அவற்றை விளக்கி, அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே அவரது வாழ்வின் முக்கிய நோக்கமாக அமைந்தது. அதற்கு அவரிடம் பயின்ற மாணவர்கள் சான்றாகத் திகழ்ந்து வருகின்றனர்.

பாலசுந்தரனாரின் தமிழ்ப்பணிகளில் முதன்மையானது இலக்கண ஆய்வாகும். குறிப்பாக, தொல்காப்பியத்தின் அமைப்பு, இலக்கணக் கோட்பாடுகள், சொற்களின் இயல்பு, மொழியின் செயல்பாடு ஆகியவற்றை ஆழமாக ஆராய்ந்த அவர்,

தொல்காப்பியத்தை வெறுமனே பழமையான இலக்கண நூலாகப் பார்க்காமல், தமிழ்மொழியின் தனித்துவமான அறிவு மரபை வெளிப்படுத்தும் நூலாகக் கருதினார்.

அவரது ஆய்வுகளில் தொல்காப்பியத்தின் மரபுவழி இலக்கணச் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தொல்காப்பியக் கருத்துகளைத் தெளிவுபடுத்துவதோடு, பிற இலக்கண நூல்களில் காணப்படும் கருத்துகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தார். இதனால், அவரது இலக்கணப் பணிகள் தமிழ் இலக்கண வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கான முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாக அமைந்தன.

தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை

பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் வாழ்நாள் சாதனைகளுள் குறிப்பிடத்தக்கது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை ஆகும். இப்பணி ஐந்து பகுதிகளைக் கொண்டதாகும். தொல்காப்பியத்தின் இலக்கணக் கருத்துகளை விரிவாக ஆராய்ந்து விளக்குவதில் இவ்வுரை முக்கியத்துவம் பெறுகிறது.

தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் ஆகிய இலக்கணப் பிரிவுகளைப் புரிந்துகொள்வதற்கு உரையாசிரியர்களின் பணி இன்றியமையாதது. அந்த வகையில், பாலசுந்தரனாரின் தொல்காப்பிய உரை மரபிலக்கண ஆய்வில் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது. அவருடைய விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடங்களும், விவாதத்திற்கு உட்பட்ட இடங்களும் உள்ளன. இத்தகைய ஏற்புகளும் மறுப்புகளும் தமிழ் இலக்கண ஆய்வின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

படைப்புலகமும் நூற்பணியும்

பாலசுந்தரனார் இலக்கண ஆய்வாளராக மட்டுமல்லாமல், பல்வேறு இலக்கிய வடிவங்களில் படைப்புகளை வழங்கிய எழுத்தாளராகவும் திகழ்ந்தார். அவரது எழுத்துப்பணிகள் மரபுப்பாக்கள், நாடகங்கள், கவியரங்கப் படைப்புகள், இலக்கிய மற்றும் இலக்கண ஆய்வுகள், உரைநூல்கள், அகராதிப் பணிகள் எனப் பல தளங்களில் விரிந்திருந்தன. 1950ஆம் ஆண்டிலிருந்து அவர் மறையும் காலம் வரை ஏறத்தாழ ஐம்பது நூல்களை எழுதியுள்ளார்.

அவருடைய படைப்புகளுள் ஒரு காவிய அந்தஸ்தைப் பெற்ற சிற்றிலக்கியம் கரந்தைக் கோவையாகும். மன உலகம், புலவர் உள்ளம், அமைதி, வஞ்சப் போர், புலவர் உள்ளம் (தொண்டு), புரவலர் உள்ளம், சிவமும் செந்தமிழும், ஆதிமந்தி, பாரி, வேள் எவ்வி, வீடும் விளக்கும், சோழக் பேரொளி, சேரன் செங்குட்டுவன் என்கின்ற பதிநான்கு நாடக நூல்களை இயற்றியுள்ளார். கல்லூரி மாணவர்களுக்கான நாடகங்கள் எழுதி இசைப்பாடல்கள் அமைத்து அரங்கேற்றம் செய்துள்ளார். பாவலரின் பா நாடகங்களை பாவேந்தர் பாரதிதாசன், கவியோகி சுத்தானந்த பாரதியார், நீ. கந்தசாமிப் பிள்ளை முதலிய தமிழறிஞர்கள் பலபடப் பாராட்டியுள்ளனர்.

மூன்று பகுதிகளைக் கொண்ட மழலைத் தேன் எனும் குழந்தைப் பாக்களை பாலசுந்தரனார் வெளியிட்டுள்ளார். பாவலரின் ஓவியப் பாக்கள் எனும் சித்திர கவிகளையும் பாவலர் வரைந்துள்ளார். யான் கண்ட அண்ணா, கலைஞர் வாழ்க, இருபெருங் கவிஞர்கள், அருட்புலவோரும் அரும்பெறல் கவிஞரும், புகழ்பெற்ற தலைவர்கள் ஆகிய அரங்கப் பாக்களையும் பாவலர் பாடியுள்ளார். தமிழிசை இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட பாவலர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் மரபில் வந்தவரான து.ஆ. ஆபிரகாம் பண்டிதர் மரபில் வந்தவரான து.ஆ. தனபாண்டியன் அமைத்த புதிய இராக இசைக்குறிப்புகளுக்குப் புதிய ராகங்கள் எனும் பொருண்மையில் இசைப்பாக்கள் இயற்றியுள்ளார். நினைவலைகள் எனும் பொருண்யைில் தன்வரலாற்று நூல் ஒன்றினையும் பாவலர் படைத்துள்ளார்.

செய்யுள் இலக்கணம், மொழியாக்க நெறி மரபிலக்கணம், தென்னூல் - எழுத்து சொல் படலங்கள், தென்னூல் இலக்கியப் படலம் வளர்தமிழ் இலக்கணம், இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம் - சொற்படலம் எனும் இலக்கண நூல்களைப் பாவலர் இயற்றியுள்ளார். தென்னூல் தமிழின் புதிய வளர்ச்சிகள் அனைத்தையும் ஒருசேர உள்வாங்கி எழுதப் பட்ட நவீன இலக்கண நூலாகத் திகழ்கிறது.

தொல்காப்பியம் எனும் ராமலிங்க பகீரதம் (திறனாயவுரை), தமிழ் இலக்கண நூல்களும் பாட வேறுபாடுகளும், இலக்கண வரலாற்றுச் சிந்தனைகள், தமிழிலக்கண நுண்மைகள், மடைமாறிய தமிழ் இலக்கண நூல்கள் எனும் இலக்கண ஆய்வு நூல்களையும் பாவலர் படைத்து வெளியிட்டுள்ளார்.

சேலம் பெரியார் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை உரை ஐந்து பாகங்களை வெளியிட்டுள்ளார். இவ்வுரை புதுமைகள் பலவற்றைக் கொண்டது என்று தி,வே. கோபாலையர் பாராட்டிக் குறிப்பிட்டுள்ளார். நன்னூலுக்குத் திறனாய்வுரை ஒன்றினையும் இயற்றியுள்ளார். இவ்விரு இலக்கண உரை நூல்கள் மட்டுமன்றி திருக்குறள் தெளிவுரை எனும் இலக்கிய உரை ஒன்றினையும் இய்ற்றி இலக்கண இலக்கிய உரைகளுக்கும் தம் பங்களிப்புகளைப் பாவலர் செய்துள்ளார்.

அவரது படைப்புகளில் மொழியின் மரபைக் காப்பதற்கான ஆர்வமும், இலக்கணக் கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைக்கும் நோக்கமும் காணப்படுகின்றன. படைப்பிலக்கியமும் இலக்கண ஆய்வும் ஒன்றுக்கொன்று துணைபுரிய முடியும் என்பதை அவரது பணிகள் உணர்த்துகின்றன.

தமிழ் இலக்கண உரைநடை மற்றும் அகராதிப் பணி

எழுத்திலக்கணக் கலைச் சொற்பொருள் விளக்க அகராதி, சொல்லிலக்கணக் கலைச்சொற்பொருள் விளக்க அகராதி, யாப்பிலக்கணக் கலைச்சொற் பொருள் விளக்க அகராதி, அகப்பொருளிலக்கணக் கலைச்சொற் பொருள் அகராதி, புறப்பொருளிலக்கணக் கலைச்சொற்பொருள்துறை அகராதி ஆகிய இலக்கண அகராதி எனும் அகராதி நூல்களைப் படைத்து அகராதித் துறைக்குக் குறிப்பிடத்தக்க

பங்காற்றியுள்ள பாவலர் மொட்டும் மலரும் (சொல்லாய்வு : மூன்று தொகுதிகள்), வழக்குச் சொல் விளக்க அகராதி, கணிப்பொறிவழி சங்கத்தமிழ் ஆய்வு எனும் சொல்லாய்வு நூல்களையும் படைத்துள்ளார்.

தமிழில் இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொள்வதற்கு எளிமையான விளக்கமும் துல்லியமான சொல்லாட்சியும் தேவை. இந்தத் தேவையை உணர்ந்து பாலசுந்தரனார் இலக்கண உரைநடை நூல்களிலும் அகராதிப் பணிகளிலும் ஈடுபட்டார்.

அவரது "இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம் - சொற்படலம்" என்ற உரைநடை நூல் 2005ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது. இது சொற்களின் அமைப்பு, பொருள், வகைப்பாடு, சொல்லாக்க மரபுகள் போன்ற இலக்கணக் கூறுகளை உள்ளடக்கியதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

மேலும், சைவசித்தாந்த அகராதி தொடர்பான பணியிலும் அவர் சொற்களுக்கு விளக்கம் அளித்து உதவியுள்ளார். இதன் மூலம், இலக்கண ஆய்வைத் தாண்டி மொழியின் சொல்வளத்தை விளக்கும் பணியிலும் அவர் பங்களித்தமை புலப்படுகிறது.

ஆசிரியப் பணி மற்றும் மாணவர் உருவாக்கம்

பாலசுந்தரனார் ஆசிரியப் பணியைத் தமது வாழ்வின் முக்கியமான பணியாகக் கருதினார். ஏறத்தாழ 32 ஆண்டுகள் ஆசிரியராகச் செயல்பட்டு, பல மாணவர்களுக்கு இலக்கணத்திலும் இலக்கியத்திலும் பயிற்சி அளித்தார். அவரிடம் பயின்றவர்களில் கவிஞர் ஈரோடு தமிழன்பன், சரவணத் தமிழன், எழுத்தாளர் பிரபஞ்சன், புலவர் இரா. கலியபெருமாள், புலவர் ம. கந்தசாமி உள்ளிட்ட பலர் குறிப்பிடத் தக்கோராகத் திகழ்கின்றனர். அவரிடம் பயின்ற மாணவர்கள் இன்றும் அவரிடம் பேரன்பு கொண்டு திகழ்வதைக் காணமுடிகிறது.

ஒரு சிறந்த ஆசிரியரின் பணி பாடங்களை நடத்துவதோடு நிறைவடைவதில்லை; மாணவர்களிடையே சிந்தனைத் திறனையும் ஆய்வு மனப்பான்மையையும் வளர்ப்பதிலும் அது அடங்கியுள்ளது. பாலசுந்தரனாரின் கல்விப் பணியை இத்தகைய நோக்கில் மதிப்பிடலாம்.

கவியரங்கம், அமைப்புப் பணி மற்றும் பிற திறன்கள்

பாலசுந்தரனார் கவிதை இயற்றுவதிலும் கவியரங்குகளில் பங்கேற்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். தொல்காப்பியர் கழகம், திருக்குறள் பேரவை போன்ற அமைப்புகளுடன் தொடர்புகொண்டு தமிழ்ப்பணிகளில் ஈடுபட்டார். மேலும், ஆயிரக்கணக்கான தமிழ்முறைத் திருமணங்களை நடத்தி வைத்துள்ளார்.

இவருடைய பன்முக ஆளுமையில் சிற்பக்கலையும் இடம்பெற்றிருந்தது. தஞ்சாவூரில் வடவாற்றுப் படித்துறையிலுள்ள பிள்ளையார் சிலையை அவர் செதுக்கியதாக அவருடைய வாழ்க்கைக் குறிப்பு பதிவு செய்கிறது. இதனால், சொற்களைச் செதுக்கிய

இலக்கண அறிஞராக மட்டுமன்றி, கல்லிலும் கலைத்திறனை வெளிப்படுத்தியவராகவும் அவரது ஆளுமையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பாலசுந்தரனாரின் ஆய்வுச் சிறப்பு

பாலசுந்தரனாரின் ஆய்வுப் பணிகளை,

1. தொல்காப்பியம் உள்ளிட்ட மரபிலக்கண நூல்களின் கருத்துகளை ஆராய்ந்து விளக்குதல்.

2. கடினமான இலக்கணக் கருத்துகளை விரிவாக எடுத்துரைத்தல்.
3. சொற்களின் அமைப்பு, பொருள், பயன்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.

4. கவிதை, நாடகம், இலக்கணம், அகராதி எனப் பல துறைகளில் இயங்குதல்.

5. ஆசிரியப் பணியின் மூலம் தமிழ் அறிவைப் பரப்புதல்

என்னும் அடிப்படையில் மதிப்பிடலாம். இவற்றின் அடிப்படையில், பாலசுந்தரனாரை வெறும் இலக்கண உரையாசிரியராக மட்டும் கருதுவது அவரது பங்களிப்பின் முழுமையை வெளிப்படுத்தாது. தமிழ் இலக்கணத்தைத் தமது சிந்தனைக்கும் ஆய்வுக்கும் உரிய துறையாகக் கொண்டிருந்த அறிஞராக அவரைப் புரிந்துகொள்வதே பொருத்தமானது.

பாவலரேறு ச. பாலசுந்தரனார் தமிழ் இலக்கண ஆய்வு, தொல்காப்பிய உரையாக்கம், படைப்பிலக்கியம், அகராதிப் பணி, ஆசிரியத் தொண்டு ஆகிய பல துறைகளில் தமது தடத்தைப் பதித்தவர். அவரது நூல்களும் ஆய்வுகளும் தமிழ் மொழியின் மரபையும் இலக்கணச் சிந்தனையையும் ஆராய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

ஒரு மொழியின் பெருமை அதன் தொன்மையில் மட்டுமல்ல; அதன் மரபை ஆராய்ந்து, காலத்திற்கேற்ப விளக்கி, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் அறிஞர்களின் உழைப்பிலும் உள்ளது. அந்த வகையில், பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் வாழ்வும் பணிகளும் தமிழ் ஆய்வுலகில் நினைவுகூரப்பட வேண்டியவை. அவரது நூல்களைத் தொடர்ந்து படித்தலும், அவரது ஆய்வுக் கருத்துகளை விமர்சன நோக்கில் ஆராய்தலும், தமிழ் இலக்கண மரபின் வளர்ச்சிக்குப் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.